1992 செப்டம்பர் 24]. [திரு. ம. சின்னசாமி

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 30-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய என்பத்திரெண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்:

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''

எனக் கோருகிறேன்.